**சுருக்கம்**

பொதுப்பணிகள் – வேளாண்மை–உழவர் நலத் துறை – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் – கருணையடிப்படையில் திரு வெ.சதீஸ்குமார், இளநிலை உதவியாளராக திருச்சி விற்பனைக் குழுவில் பணி நியமனம் செய்யப்பட்டமை –04.05.2020 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்தல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை–உழவர் நலத் (வே.வி.1) துறை**

அரசாணை (3ப) எண்.118

நாள்: 30.08.2022

திருவள்ளுவர் ஆண்டு 2053
ஆவணித் திங்கள் 14 ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 23.01.2020
2. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கடித எண்.விகுப.4/29038/2021, நாள்.11.07.2022.

-----

**ஆணை:**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கடிதத்தில், திருச்சி விற்பனைக்குழுவில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு ந. வெங்கடேசன் அவர்கள் 19.12.2009 அன்று இயற்கை எய்தியதைத் தொடர்ந்து அன்னாரின் மனைவி திருமதி வெ.அறிவுக்கண்ணு அவர்கள் 05.03.2010 நாளிட்ட விண்ணப்பத்தில் இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரர்களின் ஒருவரும், தன்னுடைய மகனுமான திரு வெ.சதீஸ்குமார் அவர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறு கோரியிருந்தார். அதனடிப்படையில் திரு வெ.சதீஸ்குமார் அவர்களும் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 05.03.2010 நாளிட்ட விண்ணப்பத்தில் கோரியிருந்தார் என்றும், அவ்வாறு விண்ணப்பித்த போது தனியர் உரிய கல்வித்தகுதி மற்றும் வயது போன்ற தகுதிகள் பெற்றிருந்ததைக் கருத்திற் கொண்டு, தன்னுடைய செயல்முறை ஆணை எண். விகுப3/19248/2011, நாள். 01.04.2020–இன்படி திருச்சி விற்பனைக்குழுவில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தனியருக்கு பணி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது என்றும், அதனடிப்படையில் செயலாளர், திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழு அவர்களின் செயல்முறை ஆணை எண். ஆ/961/2020, நாள். 30.04.2020–இன்படி திருச்சி விற்பனைக் குழுவில் தனியருக்கு தற்காலிக இளநிலை உதவியாளராக பணிநியமன உத்தரவு வழங்கப்பட்டு 04.05.2020 முற்பகல் முதல் தனியர் பணிபுரிந்து வருகிறார் என்றும் தெரிவித்து, தனியரின் கல்வித் தகுதி மற்றும் அதன் உண்மைத்தன்மை உள்ளிட்ட சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை அரசுக்கு அனுப்பி தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 04.05.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2) மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையிலான பணி நியமனம் மற்றும் பணி வரன்முறை தொடர்பாக தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் மூலம் ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வழிகாட்டுதல்களின் அடிப்படையில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, திருச்சி விற்பனைக்குழுவில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திரு வெ.சதீஸ்குமார் என்பவரின் பணியினை அப்பதவியில், அவர் அப்பதவிக்குரிய உடற் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியர் பணியில் சேர்ந்த நாளான 04.05.2020 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

3) திரு வெ.சதீஸ்குமார், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியானது 04.05.2020 முற்பகல் முதல் அப்பதவியில் வரன்முறை செய்யப்படுவதால், அவர் வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை பெற விதிகளின்படி தகுதியுடையவராவர் எனவும் அரசு ஆணையிடுகிறது.

4) இவ்வரசாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.14805/Q1/2022–1, நாள்.05.08.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.2943617/G/2022, நாள். 17.08.2022–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

**பெறுநர்**

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர், சென்னை–32.
செயலாளர், திருச்சி விற்பனைக்குழு, திருச்சி.
(வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர், சென்னை–32 மூலமாக)
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/(பெயரில்)
முதன்மை மாநிலக் கணக்காயர் (G & SSA) சென்னை–18
முதன்மை மாநிலக் கணக்காயர் (E & RSA) சென்னை–18
இருப்பிடத் தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் (பொது மற்றும் சமூகப்பிரிவு தணிக்கை) அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
இயக்குநர், உள்ளாட்சி நிதிக்கணக்குகள் மற்றும் தணிக்கைத் துறை, சென்னை–108.

**நகல்**

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், சென்னை–9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–9
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை–9.
வேளாண்மை–உழவர் நலத் (அநமு–3) துறை, சென்னை – 9.
உதவி நிரலர், வேளாண்மை – உழவர் நலத் துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழு, திருச்சிராப்பள்ளி.
செ.மு. எண்:- ஆ/961/2020, நாள்: 18.10.2022

பிரிவு அலுவலர்

அரசாணை அசல் அனுப்பப்படுகிறது.

பெறுநர்
திரு. வெ. சதீஸ்குமார், இளநிலை உதவியாளர், திருச்சி விற்பனைக்குழு, திருச்சி.

செயலாளர்
திருச்சிராப்பள்ளி விற்பனைக் குழு
திருச்சிராப்பள்ளி.
[illegible]/10/2022